**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : MC.No.17/2024**
**Preliminary Register :**

**Deposition of witness for : PW1 CROSS**

**Name : C.S. Niveda**

**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.04.2026**
**(எதிர் மனுதாரர் ஆஜர் இல்லை, எதிர் மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. எங்களுக்கு 25.11.2018 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணம் நடைபெற்ற பிறகு இரண்டு மாதங்கள் கூட்டு குடும்பமாக வாழ்ந்தேன். நான் திருமணம் ஆன இரண்டு மாதங்களில் கருவுற்ற பின்பு என்னை அடித்து எனது வீட்டிற்கு துரத்தி விட்டனர். ஜனவரி மாதம் 2019 ஆம் ஆண்டு என்னை முதல் முறை வீட்டை விட்டு அனுப்பி விட்டனர். அதன் பின்பு 2020 ஆம் ஆண்டு மறுபடியும் அனுப்பிவிட்டனர், 31.01.2019 அன்று எனது கணவருக்கு எதிராக நீலாங்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான் அன்று எனது கணவர் ஊரில் இருந்தாரா என்றால் எனது வீட்டுக்கு வந்து அவர் பிரச்சினை செய்ததால் தான் நான் புகார் கொடுத்தேன். எனது கணவர் எனக்கு சுமூக

முறையில் தான் எனது வீட்டிற்கு அனுப்பி வைத்தார். அதன் பின்பு எனக்கு மெசேஜ் அனுப்பினார்.

2. நான் வீட்டுக்கு வருவதாக அதனை அடுத்து எனது கணவரும் அவரது பெற்றோர்களும் அவரது உறவினர்களும் எனது வீட்டிற்கு வந்து சத்தம் போட்டதால் அக்கம் பக்கத்தினர் தொந்தரவு ஏற்பட்டதால் எனது வீட்டின் உரிமையாளர் புகார் கொடுக்கும்படி அறிவுறுத்தியதால் நான் நீலாங்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த இரண்டு நாட்களில் காவல் நிலையத்திலிருந்து விசாரணைக்கு அழைத்தனர், விசாரணையில் அறிவுரை கூறி சமாதானம் செய்து அனுப்பிவிட்டனர். ஃபேமிலி கவுன்சிலிங் செய்வதாக கூறினர். ஆனால் அவர்கள் அதை ஏற்பாடு செய்யவில்லை அதை தவிர்த்து சைக்காட்ரிக் கவுன்சிலிங் ஏற்பாடு செய்தனர். ஏன் என்று கேட்டேன் போலீஸ் விசாரணை முடித்த பின்பு எனது தாயார் வீட்டுக்கு தான் சென்றேன். நான் இரண்டு மாதங்கள் கர்ப்பமாக இருந்த பொழுது எனது கணவர் எனது வீட்டுக்கு வந்து அழைத்துச் சென்றார் என்றால் சரியல்ல நான் தான் அவர் வீட்டுக்கு சென்றேன். எனது கணவர் வீட்டுக்கு சென்ற பின்பு நான் வேறு எந்த புகாரும் எனது கணவர் மீது கொடுக்கவில்லை. ஆனால் அவர்கள் தான் என் மீது புகார் கொடுத்தார்கள்.

3. எனது கணவரின் பெற்றோர்கள் வீட்டில் கேட்டரிங் தொழில் செய்து வருகிறார்கள். அதில் வருமானம் ரூ.40,000/- வருகிறது என்று குறிப்பிட்டுள்ளேன். மொத்தமாக ஒரு லட்சத்து 40 ஆயிரம் வருமானம் வருவதாக குறிப்பிட்டுள்ளேன். எனது கணவர் கேட்டரிங் பிசினஸ் செய்ய வில்லை என்றால் அவர் அதற்கு உதவி செய்வார். எனது மகளுக்காக அவர் மருத்துவ காப்பீடு எடுத்துள்ளதாக வெறும் தெரியுமா என்றால்

எடுத்துள்ளதாக அனைத்து நீதிமன்றத்திலும் குறிப்பிட்டுள்ளார் ஆனால் இதுவரை நான் பார்த்ததில்லை. மெடிக்கல் இன்சூரன்ஸ் அட்டையை அவர் எனது முகவரிக்கு அனுப்பியும் நான் தபால் நிலையத்திலிருந்து எனக்கு தெரிவித்த பின்பும் அதை நான் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரியல்ல எனக்கு எந்த தகவலும் அதைப் பற்றி வரவில்லை. எனது குழந்தையை பள்ளியில் சேர்க்கும் பொழுது எதிர்மனுதாரருக்கு அந்த தகவலை பற்றி தெரிவித்தேன் என்றால் நான் நேரடியாக சொல்லவில்லை எனது வழக்கறிஞர் மூலம் தகவலை தெரிவித்தேன்.

4. எனது குழந்தையை பள்ளியில் சேர்க்கும் பொழுது நான் சிங்கிள் பேரண்ட் என்றுதான் சேர்த்தேன் என்றால் சரிதான் எனக்கு எனது கணவரின் வருமானம் இல்லாததால் நான் அவற்றை தெரிவித்து குழந்தையை பள்ளியில் சேர்த்தேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிலிருந்து மாதம் ரூபாய் 10,000/- அனுப்பினார்கள் என்றால் காவல் நிலையத்தில் தெரிவித்தார்கள் மாதம் 15,000/- தர வேண்டும் என்று ஆனால் ஒரு மாதம் தான் 15,000 அனுப்பினார் மற்ற மாதங்களில் பத்தாயிரம் அனுப்பினார் ஆனால் நடுவில் சில மாதங்கள் அனுப்பவில்லை. எனது குழந்தையை பள்ளியில் கட்டணம் செலுத்துவதற்கு எதிர் மனுதாரர் கட்டணம் செலுத்துகிறாரா என்றால் நீதிமன்றம் மூலமாக தான் செலுத்துகிறார் அதற்கு முன்பு நான் கடன் பெற்று தான் பள்ளியில் பள்ளி கட்டணம் செலுத்தினேன் அதன் பின்பு நீதிமன்றம் மூலமாக பெற்று அந்த கடனை செலுத்துகிறேன். எனக்கு நிரந்தர வருமானம் கிடையாது நான் பள்ளி குழந்தைகளுக்கு டியூஷன் எடுப்பதும் ஆன்லைனில் சில பொருட்களை விற்பனை செய்வது மூலம் சிறிய வருமானம் மூலம் எனது நிரந்தரமற்ற வருமானத்தை கொண்டு வாழ்கிறேன்.

5. இந்த வழக்கிற்கு முன்பு எதிர் மனுதாரர் என் மீது தாம்பரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். சேர்ந்து வாழ்வதற்காக வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கில் நான் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளேன் என்று குறிப்பிட்டேன் ஆனால் அவர் அந்த வழக்கை திரும்ப பெற்றுக் கொண்டார். அந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு நான் DVC மற்றும் MC வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் இந்த வழக்கை பணம் பெறுவதற்காக தான் தாக்கல் செய்துள்ளேன் அவருடன் சேர்ந்து வாழ்வதற்கு தயாராக இல்லை என்றால் எனக்கு வாழ்வாதாரத்திற்கு பணம் தேவை எனது குழந்தை வளர்க்க வேண்டும் எனது விவாகரத்து வழக்கில் அவருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் .

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

**Sd/-M.N.**ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No./2024**
**Preliminary Register :**
**Police Station : PS**

**Deposition of witness for :LW/PW**
**:**

**Name :**
**:S/o.**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.09.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

**:**Pw1 cross

என்னிடம் காட்டப்படும் ஆவணம் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த வழக்கில் என்னை குறுக்கு விசாரணை செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் எதிர் மனுதாரர் சான்றாவனம் 12 ஆக குறைவு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில்

தொடரப்பட்ட விவாகரத்து வழக்கின் உத்தரவு என்றால் சரிதான் அந்த உத்தரவு எதிர் மனுதாரர் சான்றாவணம்13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மறுவிசாரணை :** இல்லை

**Certified that the examinations of the accused was taken by me/in the presence and hearing /and that the record contains a full and true account of the statement made over interpreted to it has been shown/read over interpreted to him/her in the language which he/she understands.**

**District Munsif cum Judicial Magistrate**
**Sholinganallur.**

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No./2024**
**Preliminary Register :**
**Police Station : PS**

**Deposition of witness for :LW/PW**
**:**

**Name :**
**:S/o.**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.09.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

முதல் விசாரணை **:**

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

**Certified that the examinations of the accused was taken by me/in the presence and hearing /and that the record contains a full and true account of the statement made over interpreted to it has been shown/read over interpreted to him/her in the language which he/she understands.**

**District Munsif cum Judicial Magistrate**
**Sholinganallur.**

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No./2024**
**Preliminary Register :**
**Police Station : PS**

**Deposition of witness for :LW/PW**
**:**

**Name :**
**:S/o.**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.09.2025**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

முதல் விசாரணை **:**

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை

**Certified that the examinations of the accused was taken by me/in the presence and hearing /and that the record contains a full and true account of the statement made over interpreted to it has been**

**shown/read over interpreted to him/her in the language which he/she understands.**

**District Munsif cum Judicial Magistrate**
**Sholinganallur.**